


பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (21.12.2023) அதிகனமழையினால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் பகுதியில், தேங்கியுள்ள மழைநீர் விரைவாக வடியும் வகையில் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி நடைபெறுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் இரா. சந்திரசேகர் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மிக்ஜாம் புயலால் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக

# 5,000 மரக்கன்றுகள் நடும் திட்டம் துவக்கம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில்

### நடிகர் வடிவேலு - பூவுலகின் சுந்தர்ராஜன் துவக்கி வைத்தனர்!

சென்னை, டிச.22-

பசுமை சைதைத் திட்டத்தின் கீழ் மிக்ஜாம் புயலால் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக சைதை தாடண்டர் நகரில் 5,000 மரக்கன்றுகளை நடிகர் வைகைபுயல் வடிவேல் - பூவுலகின் நண்பர்கள் சுந்தர்ராஜன் ஆகியோரால் நட்டு தொடங்கி வைக்கப்பட்டது என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

அது வருமாறு:-

ஒவ்வொரு மரமும் வெறும் மரமல்ல... அது நம் வளமான வாழ்விற்கான உரம். ஒரு நாடு முப்பத்தி மூன்று சதவிகித வனப்பரப்பு கொண்டிருக்க வேண்டிய நிலையில் 2017ஆம் ஆண்டின்படி, சென்னையைப் பொறுத்தவரை 6.5 சதவிகிதமே இருந்த பசுமைப்பகுதி 'வர்தா' புயலின் காரணமாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மரங்கள் வீழ்ந்த காரணத்தால் 4.5 சதவிகிதமாக குறைந்துவிட்டது.

இதனை அதிகரிக்கும் விதமாக நமது தலைவர், முதல்வர், 'மரம் வளர்த்தால் தான் நாடு செழுமையடையும்; போதிய மழை பெய்யும்; மக்களும் வளமாக இருக்க முடியும் என்று கூறினார்கள். அவரது கூற்றினை ஏற்று சைதை தொகுதியின் மக்களுக்காக அதன் சட்டமன்ற உறுப்பினரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அவர்களால் தொடங்கப்பட்ட திட்டமே 'பசுமை சைதை'.

சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் வசிக்கும் அனைவரும் இத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில், அவரவர் பிறந்த நாளின்போது, அவரவர் வசிக்கும் பகுதியில் மரக்கன்றுகளை, பாதுகாப்பு வளையத்துடன் நட்டுத்தரும் சிறப்புத் திட்டமே இந்த 'பசுமை சைதை' திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ் நடப்படும் மரக்கன்றினை ஒரு வருட காலம் நல்ல முறையில் தொடர்ந்து பராமரிப்பவர்களுக்கு 'பசுமை பாதுகாவலர்' விருதும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடுவதே லட்சியம் என உறுதி செய்யப்பட்டு, 2017-ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதியன்று, தமிழக மக்களின் நல்வாழ்விற்கான அஸ்திவாரமாய் எந்த ஆதிக்க சக்தியாலும் அசைக்க முடியாத ஆலமரமாய் வீற்றிருக்கும், நம் தமிழக முதல்வர் அவர்கள், தொட்டது துலங்கும் தன் பொற்கரங்களால் இந்த பசுமை சைதை திட்டத்தை தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் இரண்டாயிரமாவது மரக்கன்றை, மறைந்த நடிகரும், சமூக ஆர்வலருமான பத்மஸ்ரீ விவேக் அவர்கள் நட்டு வைத்து, எதிர்கால சந்ததியினருக்கான அற்புதமான திட்டம் இது எனக்கூறி, சைதை தொகுதி மக்களுக்கு தன் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இரண்டாயிரத்து ஐநூறாவது மரக்கன்றை நடிகரும், எழுத்தாளருமான ராஜேஷ் தொடங்கி வைத்து, வீட்டிற்கும், நாட்டிற்குமான மிகச்சிறந்த திட்டம் இதுவென்று கூறி அனைவரையும் பாராட்டினார்.

இத்திட்டத்தின் கீழ், மூவாயிரம் முதல் நாலாயிரம் வரையிலான மரக்கன்றுகளை அடையாற்றங்கரையில் ஆயிரம் மரங்கள் என்னும் நிகழ்வில் முன்னாள் நீதியரசர் எஸ்.ஜெகதீசன், இயக்குனரும், நடிகருமான ஆர்.பாண்டியராஜன் மற்றும் திரைப்பட இயக்குனர் ராஜுமுருகன் ஆகியோர் நட்டுவைத்து இத்திட்டத்திற்கு மேலும் பெருமை சேர்த்தனர்.

இதன் ஏழாயிரமாவது மரக்கன்றினை தமிழக இளைஞர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்த நடிகர் ஜெயம் ரவி கலந்து கொண்டு இத்திட்டத்தினை வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார்.

இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக, 'அடையாற்றங்கரையில் ஐயாயிரம் பனை விதைகள்' எனும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில், தேசிய விருது பெற்ற பெருமைமிகு தமிழ் திரைப்பட இயக்குனர் வெற்றிமாறன் கலந்துகொண்டு, பனை மரக்கன்றுகளை நட்டு, இத்திட்டம் மேன்மேலும் வளரட்டுமென மனதார வாழ்த்தினார்.

இத்திட்டத்தின் மூன்றாம் ஆண்டு துவக்கத்தில் நம்முடைய முதல்வர் நட்ட மரம் அவர்தம் செயல்திறன்போல விருட்சமென வளர்ந்து நிற்பதைப் பார்த்து அனைவரும் பெருமிதம் கொண்டோம்.

தன் கோரக்கரங்களால் ஏழை, எளிய, விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை சுழற்றி அடித்த கஜா புயலால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்ட மக்களுக்கு, பசுமை சைதை திட்டத்தின் கீழ் ஐம்பதாயிரம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் முத்தாய்ப்பாக, பசுமை சைதை திட்டத்தின் கீழ், இனமான பேராசிரியப் பெருந்தகையின் தொன்னூற்று ஏழாவது பிறந்தநாளை முன்னிட்டு, 'மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்' எனும் குறளுக்கேற்ப செயலாற்றிக் கொண்டிருக்கும், கழகத்தின் இளைஞரணி செயலாளரும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 25,000 தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க பசுமை சைதை பக்கபலமாக நின்றது.

நான்காம் ஆண்டு துவக்கத்தில் இத்திட்டத்தின் கீழ் எண்பதாயிரமாவது மரக்கன்று நடப்பட்டு, மற்ற எல்லா மரங்களைப் போலவும் இன்றுவரை பாதுகாப்போடு பராமரிக்கப்பட்டு வருகிறது.

2017 ஜூலை முதல் தேதியில் நம் முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட இத்திட்டம், சரியாக ஐந்தாண்டுகளில், அதாவது 2022-ஆம் ஆண்டு ஜூலை முதல் தேதியன்று, அதன் லட்சியமான ஒரு லட்சம் மரங்கள் எனும் இலக்கை எட்டியது. அந்த ஒரு லட்சமாவது மரக்கன்றை நடுவதற்காக, திரைப்பட நடிகராக, தயாரிப்பாளராக, விநியோகஸ்தராக என்று சென்ற இடமெல்லாம் வென்று காட்டுவதோடு, தந்தைக்கொரு தவப்புதல்வனாய் இருப்பதோடு மட்டுமல்லாமல் தலைவருக்கொரு தன்னிகரற்ற தொண்டனாகவும் செயல்பட்டுக்கொண்டு, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் இதயங்களில் இளைய தளபதியாய் இடம் பிடித்திருக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் நடப்பட்டது.

இத்திட்டத்தின் தொடர்ச்சியாய் தற்போது ஆறாம் ஆண்டில், 1 லட்சத்து 10,000 மரங்களை நடப்பட்டு பாதுகாத்து பராமரித்துவரும் "பசுமை சைதை" யின் சார்பில் தற்போது மிக்ஜாம் புயலில் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக 5,000 மரங்கள் நடும் பணி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நேற்று (21.12. 2023) காலை 10 மணிக்கு சைதை தாடண்டர் நகரில் திரைப்பட நடிகர் வைகை புயல் வடிவேலு மற்றும் பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் சுந்தர்ராஜன் ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் கணபதி, எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கணக்கு தணிக்கைக் குழு உறுப்பினர் க.தனசேகரன், மண்டல குழு தலைவர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், பெருங்குடி எஸ். ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வ நாதன், வாசுகிபாண்டியன், பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ். பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராஜா, சு.சேகர், துரைகபிலன், நொளம்பூர் வே.ராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் உள்ளிட்ட தி.மு.கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட திரு.வி.க.நகர் வடக்கு பகுதி 72 வது வார்டு நரசிம்மன் நகர் பகுதியில் உள்ள நரசிம்மன் நகர் முதல் தெரு, இரண்டாவது தெரு, மூன்றாவது தெரு,நரசிம்மன் நகர் குறுக்கு தெரு, நான்காவது தெரு, நாகத்தம்மன் கோயில் பகுதியில் உள்ள குடியிருப்பு, உள்ளிட்ட மக்களுக்கு அரிசி, பெட்ஷீட் ,பால், ரொட்டி, பிஸ்கட், ரஸ்க், தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரன பொருட்களை மேயர் பிரியா, கழக துணை அமைப்பு செயலாளர் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, பகுதி கழக செயலாளர் செ.தமிழ்வேந்தன், மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் சரவணண், வட்ட கழக செயலாளர்கள் எம்.இசட். அபாய்,எம்.ஏ.டீக்கா, முன்னிலையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இந்நிகழ்வில் அவைத்தலைவர் வேலு, சிவஜானி, ருக்மணி, எ. சேகர்,இளைஞரணி அமைப்பாளர் மணிமாறன், வழக்கறிஞர் அரவிந்தன், கிரிதரன், வழக்கறிஞர் ஜி.சங்கர், யுவராஜ், ஜெய்சிங் உள்ளிட்ட கழகத்தோழர்கள் உடனிருந்தனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் ”மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது மேற்கொள்ளபட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் செல்வி.சௌமியா ஆனந்த், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.

## நிலக்கரி தயாரிப்புச் செலவினையும்,

# அனல் மின்சக்தியின் கட்டணத்தைக் குறைக்கவும் அரசின் நடவடிக்கைகள் என்னென்ன?

### மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி?

புதுடெல்லி,டிச.22-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 13 டிசம்பர் 2023 அன்று மக்களவையில், நிலக்கரி தயாரிப்பு செலவுகளை குறைக்கவும், இறக்குமதியை குறைக்கவும், அனல் மின்சக்தியின் கட்டணத்தை குறைக்கவும், ஒன்றிய அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னென்ன? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின், மாண்புமிகு நிலக்கரித் துறை அமைச்சர், பிரகலாத் ஜோஷி அவர்களிடம் கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிலக்கரித் துறை அமைச்சர்அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:



பொதுத்துறையில் கீழ் செயல்பட்டு வரும் நிலக்கரி நிறுவனங்களில் நிலத்தின் கீழ் அமைந்துள்ள சுரங்கங்களிலும், திறந்த வெளி சுரங்கங்களிலும் பல்வேறு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தயாரிப்பு செலவினை குறைத்திட ஒன்றிய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதாகவும், நிலக்கரி தயாரிப்புகளை அதிகப்படுத்த தேவையான அனைத்து முயற்சிகளுடன் வருவாய்ப் பங்கீட்டு முறையிலும் செயல்பட அனைத்து வழிமுறைகளையும் அரசு எடுத்து வருகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நிலக்கரி இறக்குமதி செலவினை குறைத்திடும் வகையில் பல்வேறு முன்முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது என்றும், உதாரணமாக, நிலக்கரி சுரங்க ஏலத்தை முறைபடுத்துதல், புதிய சுரங்கங்களை கண்டறிதல், மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல், புதிய அனல் மின் நிலையங்களை உருவாக்குதல், கணிணி வழி ஏலத்தை ஊக்கப்படுத்துதல், போக்குவரத்து தடைகளை சீர் செய்தல் என அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது என்றும், கடந்த 2021 - 22ம் ஆண்டில் 248 மில்லியன் டன்களாக இருந்த இறக்குமதி, 2022 23ம் ஆண்டில் 237 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது என்றும், தற்போதைய இந்திய நிலக்கரி தயாரிப்பு 893 மில்லியன் டன்களாக உள்ளது என்றும், நிலக்கரி சுரங்கத்திற்கும் அனல்மின் நிலையத்திற்குமான போக்குவரத்தை சீர்படுத்தி, போக்குவரத்து செலவை குறைக்க 2014 ஆண்டு முதலாகவே பொதுத்துறை நிறுவனங்கள் கவனம் செலுத்தி வருகின்றன என்றும் அதற்கு தேவையான பணிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் ஒன்றிய அரசின், நிலக்கரித் துறைஅமைச்சர், பிரகலாத் ஜோஷி அவர்கள், மக்களவையில் திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.

## அமலாக்கத்துறை

# எனக்கு அனுப்பிய சம்மன் சட்ட விரோதமானது!

### கெஜ்ரிவால் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச. 22-

டெல்லி மதுபான கொள்கை மாற்றம் தொடர்பான வழக்கில் அமலாக்கத்துறையால் தனக்கு அனுப்பப்பட்ட சம்மன் சட்டவிரோதமானது என்று ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளரும், மாநில முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார்.

டெல்லி மதுபான கொள்கை மாற்றம் தொடர்பான வழக்கு விசாரணையில் நேரில் ஆஜராகும்படி நவம்பர் மாதம் அமலாக்கத்துறை முதலில் சம்மன் அனுப்பியது.

ஆனால் அந்த சம்மனை கெஜ்ரிவால் ஏற்காததுடன் விசாரணையில் ஆஜராக வில்லை. இந்நிலையில் நேற்று விசாரணையில் ஆஜராகும்படி, அமலாக்கத்துறை மீண்டும் சம்மன் அனுப்பியிருந்தது.

**உள்நோக்கம் கொண்ட சம்மன்!**

இதையடுத்து அந்த சம்மனுக்கு தனது பதிலை அமலாக்கத்துறைக்கு கெஜ்ரிவால் அனுப்பியுள்ளார். அதில் அவர், சட்ட ரீதியில் அனுப்பப்படும் சம்மனை ஏற்க தாம் தயாராக உள்ளதாகவும், ஆனால் முந்தைய சட்டவிரோத சம்மனை போலவே தற்போதும் சட்டவிரோத சம்மனை அமலாக்கத்துறை அனுப்பியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அமலாக்கத்துறையின் சம்மன் அரசியல் உள்நோக்கம் கொண்டது, அந்த சம்மன் திரும்ப பெறப்பட வேண்டுமென்று கூறியுள்ள கெஜ்ரிவால், தாம் நேர்மையாகவும், வெளிப்படையாகவும் வாழ்ந்து வருவதாகவும், தன்னிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லை என்றும் கெஜ்ரிவால் குறிப்பிட்டுள்ளார்.

## நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ள மீட்புப் பணிகளில்

# படகுகள் மூலம் 10 ஆயிரம் மக்களை மீட்ட மீனவர்களுக்குப் பாராட்டு - நன்றி!

### அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சந்தித்து தெரிவித்தார்!

நெல்லை, டிச.22-

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தின் காரணமாக மீட்பு பணிகளில் படகுகள் மூலம் 10,000க்கும் மேற்பட்ட மக்களை மீட்ட மீனவர் பெருமக்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பாளையங்கோட்டை வ.உ.சி. மைதானத்தில் நேரில் சந்தித்து பாராட்டி நன்றி தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

நெல்லை மாவட்டத்தில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள மக்களை மீட்பதற்கு உவரி, கூத்தங்குழி, இடிந்தகரை, கூட்டப்புளி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சின்ன முட்டம், தூத்தூர் ஆகிய மீனவ கிராமங்களில் இருந்து 72 பைபர் படகுகளுடன் 400 மீனவர்கள் உயிரினை துச்சமாக கருதி மீட்பு பணியில் ஈடுபட்டனர். இவர்கள் நெல்லை மாவட்டத்தில் உள்ள அதிக தண்ணீர் தேங்கிய நெல்லை சந்திப்பு, கொக்கிரகுளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,சிந்து பூந்துறை,சி.என். கிராமம், குறுக்குத்துறை, நொச்சிகுளம் முன்னீ பள்ளம், சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம் ஆகிய பகுதிகளில் வெளியேற முடியாமல் வீடுகளில் மேல் தளத்தில் தஞ்சம் அடைந்திருந்த 10,000க்கு மேற்பட்ட மக்களை பாதுகாப்பாக மீட்டு பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

இப்பணிகளை தங்களுடைய உயிரை பணயம் வைத்து செய்த மீனவ பிரதிநிதிகளை தமிழ்நாடு அரசின் சார்பாக பாராட்டி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தேசிய பேரிடர் மீட்புக் குழுவுக்கு நன்றி!**

மேலும் தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் அருகில் ரயிலில் சிக்கிய பயணிகளுக்கு முதற்கட்டமாக ஹெலிகாப்டர் மூலம் குடிநீர், உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்களை பத்திரமாக மீட்பதற்கு தேசிய பேரிடர் மீட்பு குழு வந்துள்ளது. அவர்களையும் அமைச்சர் தங்கம் தென்னரசு பாராட்டி நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., ஆ.பிரபாகரன், அமுல்சேவியர், காசிநாத பாண்டியன், பால முருகன், சவுந்தர பாண்டியன் மற்றும் மீனவ பிரதிநிதிகள் பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,அப்துல்வஹாப் எம். எல். ஏ. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், நெல்லை மத்திய மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெகதீஸ், ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, துணை மேயர் ராஜ், இளைஞரணி துணை அமைப்பாளர் ஜான்ரபீந்தர், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்ட பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம், பெருமாள் பட்டு ஊராட்சியில் உள்ள முல்லை நகர், ஆர்.ஜி.பி. நகர் ஆகிய இடங்களில் புதிய தார் சாலை அமைக்க ரூபாய் 1.5 கோடி ஒதுக்கப்பட்டது இதற்கான பணி துவக்க விழா நடைபெற்றது இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி புதிய சாலை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஜெயசீலன், மாவட்ட பிரதிநிதி பரமேஸ்வரன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஜெயபுகழேந்தி, கௌரி கஜேந்திரன், எஸ். சௌந்தரராஜன், கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் எஸ்.சக்திவேல், கஜேந்திரன், எஸ். நடராஜன், ஏழுமலை, கோபிகிருஷ்ணன், முகுந்தன், ராஜாராம், ராமச்சந்திரன், துரைராஜ், பெரேரோஸ், விக்னேஸ்வரன், ராதாகிருஷ்ணன், கண்ணன், சுரேஷ்பாபு, ராஜசேகர, கோபால கிருஷ்ணன், பார்த்தசாரதி, அகஸ்டின், சுமன், பிரகாஷ், ஜெகதீசன், ஜெகதீஷ்கோ உள்பட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திமுக நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்கள்